# உதயசூரியன்
UTHAYASURIYAN

விலை: 1 ரூபா

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1, திருவள்ளுவராண்டு 2011, 28—11—80, வெள்ளிக்கிழமை, ஒளி—9


சுதந்திரத்தை பறி
தாரைச்சப்பாதித்துக்
கொள்ளலாம்.
ஆனால் இழந்த சுதந்
திரத்தை மீட்பது
அரிது.
— லெனின்


UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980 -12- 1
PERIODICALS DIVISION
LIBRARY


# பாட்டாளிகளின் எழுச்சி பாஸிசத்தை அழிக்கும்!

## மக்கள் அலைதிரண்ட மாபெரும் கூட்டத்தில் தலைவர் அமிர்தலிங்கம் சங்கநாதம்

தமிழீழ இலட்சியத்திற்காக என்றென்றைக்கும் உழைத்துக்கொண்டேயிருப்போம். போராடிக்கொண்டேயிருப்போம். அதற்கிடையில் மக்களை வயிற்றிலடித்து வாழவிடாது கொன்றழிக்கும் அக்கிரம ஆட்சியை எதிர்ப்பவர்களோடு சேர்ந்து எதிர்ப்போம்.

ஆட்சியிலிருப்பவர்கள் உதைக்க உதைக்க, நசுக்க நசுக்க மக்கள் அத்தனையையும் தாங்கிக்கொண்டிருக்க முடியாது " ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ " என்று புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் பாடினனே அது போல ஆளும் வர்க்கத்தை உதைக்க வேண்டும்.

என்று யாழ் திறந்தவெளியரங்கில் ஐக்கிய தேசியக்கட்சி அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஐந்து கட்சிகளின் மாபெருங்கூட்டத்தில் தலைவர் அமிர் முழங்கினர்.

த[illegible] கூட்டணித் தலைவர் திரு. மு சிவசிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசியதாவது;

எங்கள் இலட்சியம் சமதர்ம சமுதாயம் மலரவேண்டுமென்பதில் மற்றவர்கள் யாருக்கும் நாம் பின்நிற்பவர்களல்ல. அந்தக் கண்ணோட்டத்திலே ஜனநாயக அடிப்படை உரிமைகளைப் பறிக்கின்ற ஆட்சியை எதிர்ப்பதிலே இந்த நாட்டில் வேலைவாய்ப்பு வழங்கினேம் என்று கூறிக் கூறி இந்த நாட்டிலே வாழுகின்ற வேலையற்ற இளைஞர்களுடைய வயிற்றிலே அடித்துக்கொண்டிருக்கின்ற அக்கிரம ஆட்சியை எதிர்ப்பதிலே, இறக்குமதியைச் சுதந்திரமாக்கிவிட்டோம் என்று கூறி, இங்கே உள்ள ஏழை விவசாயிகளை, படித்துவிட்டு வேறு வேலை தேடாமல் விசுவமடுவிலோ, முத்தையன் கட்டிலே, வேறு தங்களுக்குச் சொந்தமான சிறுசிறு காணித் துண்டிலோ வெங்காயம், மிளகாய் உற்பத்தி செய்து தங்கள் குடும்பங்களை வாழ வைத்த இளைஞர்களை நடுத் தெருவிலே நிறுத்திவிட்ட அக்கிரமத்தை ஒன்றுபட்டு எதிர்க்கிறோம்.



மக்களுடைய வயிற்றிலே அடித்துப் பங்கீட்டுணவைப் பறித்த கொடுமையை எதிர்ப்பதிலே, பயங்கரவாதத் தடைச் சட்டமென்று கூறிப் பல இளைஞர்களைப் பழிவாங்கிய அக்கிரமச் சட்டத்தை எதிர்ப்பதிலே, இந்த நாட்டிலே உரிமை கேட்ட தொழிலாளர்கள் ஏறத்தாழ ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் தொழிலாளர்கள், ஐந்து இலட்சம் மக்கள் நடுத்தெருவிலே நிற்கும் நிலைமைக்குத் தள்ளிய படுபயங்கரமான கொடுமையை எதிர்ப்பதிலே, எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் பன்னிரண்டு ஆண்டுகள் பிரதமராய் இருந்த ஒரு பெரிய அரசியற் கட்சியின் தலைவிக்கு அரசியல், குடியியல் உரிமைகளைப் பறித்து எதிர்க்கட்சியே இல்லாமல் செய்கின்ற அரசியல் நாசகாரத்தனத்தை எதிர்ப்பதிலே ஒன்றுபட்டு இந்த ஐந்து கட்சிகளின் கூட்டத்தை நடாத்தி மக்கள் சக்தியைத் திரட்டி ஜனநாயகரீதியாக ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

இந்த நாட்டில் உரிமை கோருகின்ற மக்கள் இனரீதியாக விடுதலை கோரினல் என்ன வர்க்கரீதியாக உரிமை கோரினல் என்ன அதை நசுக்கவே இங்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள். இதனை இன்று சிங்களத் தலைவர்களும் மக்களும் நன்கு அனுபவிக்கிறார்கள். அதனலே தான் இன்று இந்த ஐந்து கட்சிகளும் இப்படி இங்கே கூடி நிற்கின்றன.

பன்னிரண்டு ஆண்டுகள் பிரதமராக இருந்த திருமதி சிறிமாவோ அம்மையாரின் ஆட்

(8 ஆம் பக்கம் பார்க்க)



## மாணவனும் மந்திரியும்

ஆசிரியர்:— உள்நாட்டமைச்சரின் பெயர் என்ன?

மாணவன்:— திரு. நிசங்கா விஜயவர்த்தன.

ஆசிரியர்:— இல்லை இது பிழையான விடை.

மாணவன்:— ஏன் சார்? இந்து கலாச்சார மந்திரி திரு. செ. இராசதுரை பாராளுமன்றத்தில்பேசும்போது திரு. நிசங்கா விஜயவர்த்தனதான் உள்நாட்டமைச்சர் என்று சொல்லியிருக்கிறாரே

ஆசிரியர்:— அவர் சொன்னது பிழை.

மாணவன்:— அந்த மந்திரி திரு இராசதுரையே விடைசொல்ல முடியாத கேள்வியை என்னிடம் கேட்டால் நான் எப்படி சார் சொல்ல முடியும்.

ஆசிரியர்:— ஆ...க ...!...?......!...?!

## உதயசூரியன் வாசகர் வட்டம்

ஊர்கள்தோறும் 'உதயசூரியன் வாசகர்வட்டம்' அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கானமுயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

வட்ட அமைப்புக்கான விதி முறைகள் பின்னர் அறிவிக்கப்படும் இதுசம்பந்தமாக வாசகர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் நிச்சயம் வரவேற்கப்படும்.

—ஆசிரியர்

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# அந்தக் கனவுகளில் மட்டும்...

(சிறுகதை)

காலையிலிருந்தே கமலத்தோடு சண்டை தான்.

''உங்களுக்கென்ன உங்கடை பாட்டில போயிடுவீங்க. இங்க நான் ஆட்டைப் பார்க்கவா இல்லை மாட்டைப் பார்க்கவா இல்லை சமையலைப் பார்க்கவா ... ... எதைப் பார்க்க. கையுக்கு உதவியாய் ஒரு ஆள் இல்லை.''

''என்னை என்னப்பா செய்யச் சொல்லுகிறுய்.''

''நீங்கள் முதல்ல ஒருஆளை வேலைக்குப் பிடியுங்கோ.''

''போன முறை பிடிச்ச பெடியனை ஏன் விட்டனி. மெய்யே உன்னேடையும் ஒரு தர் காலம் தள்ளலாமே...''

''அவன் சரியான கள்ளப் பெடியன். களவெடுத்து நூறு ரூபாய் சேர்த்துப்போட்டான். பிறகும் என்னண்டு வைச்சிருக்கிறது. ஆராவது மனிசனைப் பார்த்துப் பிடிச்சால் வீட்டு வேலையளோடை வயல் வேலையளுக்கும் உதவியாய் இருப்பான்.''

''சரி சரி பார்ப்பம்.''

''இந்த பார்ப்பம் எண்ட பேச்சை விட்டிட்டு ஒருதனைத் தேடிப் பாருங்கோ.''

''ஓமப்பா......பார்க்கிறன். இந்தக் காலத்தில ஒருதனை நல்ல ஆளாய் தேடி எடுக்கிறது எவ்வளவு கஷ்டம் தெரியுமே''

''ஒவ்வொரு வீட்டிலயும் ஒவவொருதனை வேலைக்கு எடுத்து வைச்சிருக்கினம். ஆக உங்களுக்குத்தான் ஆள்தேட ஏலாது''

கமலம் மனதில் ஒன்றை நினைத்துக் கேட்டாளானுல் என்னுல் நிறைவேற்றுமல் இருக்கமுடியாது தன்னுடைய சரீரத்தை தூக்கிக்கொண்டு அங்குமிங்கும் ஓடி ஆடி அவளால் வேலை செய்ய முடியாது தான். மூச்சிரைக்க அவள் வேலை செய்வதைப் பார்க்க எனக்கும் பாவமாகத்தான் இருக்கிறது. அதற்காக என்னுலும் அவளது வேலைகளைப் பார்ந்து செய்ய முடியாது. ஆடுகளுக்குப் பின்னுல் ஓடி ஓடி குழைகளைப் போட எனது 'பெரிய' மனிதத் தோரணை இடம் தராது. கட்டாயம் ஒரு ஆளை ஒழுங்கு செய்யத் தான் வேணும்.

அப்போது பார்த்து முன் வாசலில்''ஐயா'' என்ற குரல் கேட்டது.


''ஆரோ கூப்பிடுகினம். என்னவெண்டு போய்ப் பாருங்கோ.'' என்றுள் கமலம்.

நான் முன் வராந்தாவுக்கு வந்தேன் முற்றத்தில் ... ...

இடுப்பில் சுற்றிய அழுக்கு வேட்டியுடனும் தோளில் சிறு துண்டுடனும் கறுப்பாய், உயரமய், உரமாய் ஒருவன் நின்றுன். என்னைக் கண்டதும் ... ... ''ஐயா'' என்று கும்பிட்டான்.

சரிதான் ... ... யாரோ பிச்சைக்கு வந்திருக்கிறுன் என்ற நினைவில் ''கமலம்...'' என்று கூப்பிட்டேன்.

''இங்கை ஏதாவது கொண்டுவந்து போடு.''



கமலம் பெட்டிக்குள் கொஞ்ச அரிசியுடன் வெளியே வந்தாள்.

நின்றவன் தலையைப் பரபரவென்று சொறிந்தான்.

''ஐயா நான் பிச்சைக்கு வரலீங்க.'' என்றுன்.

''பின்னை என்ன அலுவல்?''

நான் அவனை ஊன்றிப் பார்த்தேன்.

குழி விழுந்த கண்கள் ...... உயிர்ப்புடன் ஊசலாடும் கருமணிகள்...... முள் முள்ளாய் நரைத்த தாடியும் மீசையும்... ஒட்டிய வயிறுமாய்... பிச்சைக்காரனுக்கும் இவனுக்கும் வித்தியாசம் பெரிதாய் என்ன இருக்கப் போகிறது?

''ஐயா! இங்கே ஏதும் வேலை கிடைக்குங்களா?''

தோள் துண்டு இப்போது கைக்கு மாறியது. பணிவாக நின்றுன். தனது கீழ்ப்படிதல் வேலைக்கு ஒரு சான்றிதழ் என்று நினைத்தானே என்னவோ.........

''வேலைகேட்டு வந்திருக்கிறியா.........''

என் கண்களும் கமலத்தின் கண்களும் ஒரு தடவை சந்தித்து மீண்டன அவள் கண்ணுல் ஜாடை காட்டினுள்.

''என்ன வேலை தெரியும்?'' என்று கேட்டேன்.

''என்னங்கய்யா அப்பிடிக் கேட்டீங்க எல்லா வேலையும் தெரியுமுங்க எது சொன்னுலும் செய்வேனுங்க'' என்றுன் அவசர அவசரமாக.

எங்கே மறுத்து விடுவேனே என்ற பயத்தில் என்னைக் கெஞ்சி நிற்கும் அந்த பரிதாபமான பார்வை ......... என் மனதை லேசாய் தொட்டது.

''வீட்டு வேலையெல்லாம் செய்வியா?'' என்றுள் கமலம்.

'எல்லாம் செய்வெனுங்க சொல்லிப்பாருங்க ஆடு, மாடு எல்லாம் கவனிப்பேனுங்க'

அவன் குரலில் சற்று உற்சாகம்.

ஐயா மறுத்தாலும் அம்மாவாவது வேலையில் சேர்த்துக் கொள்ளமாட்டாளா என்ற எதிர்பார்ப்பு.........

'வயல் வேலை ?' இது நான்.

''தெரியுங்க' அதே அவசரம்.........

நான் கமலத்தைப்பார்த்தேன்...... அவனை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாமா என்பதைப்போல.........

'ஆளை கொஞ்சம் விசாரிச்சுப் பாருங்கோ' என்று கிசு கிசுத்தாள் அவள்

உன்னர ஊர் பேரைச் சொல்லு...

கொஞ்சம் உயிர்ப்புடன்... இங்குவேலை கிடைக்கக்கூடும் என்றநப்பாசையுடனும்அவன் சொன்னுன்.

'எம்பேரு முத்துங்க இந்தியில இருந்து வந்து மலைநாட்டில்தான் குடியிருந்தமங்க. குடும்பம் பிள்ளை குட்டிங்க எல்லாம் இருக்காங்க. மலைநாட்டில ரொம்ப கஷ்ரமுங்க நல்ல நிலையிலஇருந்தவங்க நாங்க. இப்பபுள்ளைங்களெல்லாம் பசியால துடிக்கிறதை பார்க்க சகிக்கலே,

கண்களில்கலங்கலின் சாயை அடுத்தகணம் அப்படியேதரையில் விழுந்து என்கால்களைப் பற்றிக்கொண்டான்.

'ஐயா எப்படியாவது ஒரு வேலை தாங்க. உங்களுக்குபுண்ணியம் கிடைக்கும்,'

'சீ எழும்பு முத்து... இதென்னது...எழும்பு சொல்லுறன்.'

அவன் எழுந்து துண்டால் கண்களை முகத்தை துடைத்துக் கொண்டான். கமலம் அவனை அனுதாபத்தோடு பார்த்துக்கொண்டு நின்றுள்.

'எனக்கு ஏழு புள்ளைங்க. மூத்தவங்க ரெண்டுபேரும்கலியாணம் கட்டிக்கிட்டுபோயிட்டானுங்க. பொம்பளை கூட போனபயலுங்களெங்களை திரும்பியும் பார்க்கிறதில்லைமலையில உழைச்சுவாற கூலி அரை வயத்துக்கே போதாது. எங்க மலையில முந்திவேலை செய்திட்டிருந்தமுருகையன்இந்தப் பக்கமா வந்து நல்லா பிழைச்சுக்கொண்டிருக்கிறுன். அவன்தான் சொன்னுன் பரந்தன் பக்கம் போனியானு வயல்ல ஏதும் வேலை கிடைக்கும்னு. அதாங்க புறப்பட்டு வந்தேங்க உங்ககிட்ட வேலைகிடைக்கக்கூடும்னு இங்கே சொன்னுங்க எப்படியாவது எனக்கு வேலை கொடுங்க கஞ்சி குடிக்க வழி பண்ணுங்க.'

அவனது கெஞ்சலும் பார்வையும் என்னை சம்மதிக்க வைத்தது.

'சரி இங்கேயே வீட்டில தங்கிக்கொண்டு வயல் வேலைகளைச் செய்யலாம்,'

நான் முடிப்பதற்குள் கமலம் குறுக்கிட்டாள்,

'கூடவே வீட்டு வேலையையும் செய்யவேணும்.'

'சரிங்க. செய்யறேங்க, ரொம்ப சந்தோஷமுங்க.'

இருவரையும் மாறி மாறி கும்பிட்டான்,

'அம்மா கொஞ்சம் தண்ணி கொடுங்கம்மா'

கமலம் உள்ளேபோய் செம்புடன் வந்தாள்.

'முத்து...நீ எப்படி... நல்ல ஆக்களே......'

'நான் நல்ல சாதிக்காரனம்மா நல்லாய்இருந்துநொந்து போனவன்'

---

## தாமரைச் செல்வி

---

நான் கமலத்தை சற்று முறைப்பாய் பார்த்தேன்.

கடைக்குப்போனுல் ஆயிரம் பேர் குடிச்ச கிளாஸில கிறீம் சர்பத் குடிப்பாய் இப செம்பில சுத்தம் பார்க்கிறுய்— என்று சொல்ல வேண்டும் போலிருந்தது,

'கமலம் செம்பை அவனிடம் எட்டிக் கொடுத்தாள்.

தண்ணீரைக் குடித்துவிட்டு அவன் கமலத்தைதொடர்ந்து உள்ளே போனுன் என் மனம் அவன் சொன்னவற்றை அசை போடுகிறது.

மெல்ல உள்ளே எட்டிப் பார்க்கிறேன்.

அடுக்களையை அடுத்துள்ள தாழ்வாரத்தில் அமர்ந்து இலையிலிருந்த சோற்றைப் பிசைந்தபடி ஏதோ யோசனையில் இருந்தான் முத்து.

'என்ன யோசிக்கிறுய்' சாப்பிடு கமலம் கறியை ஊற்றினுள்.

'இல்லீங்கம்மா இப்படி சோற்றைக் கண்டு எத்தனை நாளாச்சு, சத்தத்தை குழைக்கிறப்ப வீட்டு நினைவு வந்திருச்சு, மறுபடியும் துண்டால் கண்ணை துடைத்தான்.

முத்துவீட்டுக்கு வேலைக்குவந்து இரண்டு மாதம் ஓடி விட்டது ஒவ்வொருவரைப் பற்றி ஒவ்வொரு குறைகளைச் சதா சொல்லும் கமலம் கூட இவனைப்பற்றி எந்த குறையும் சொல்வதில்லை. அவ்வளவு பக்குவமாக நடந்து கொள்கிறுன் கமலத்துக்கு அவன்மீது தனியான அனுதாபமே வந்து விட்டது

'பாவம் அவன் நல்லாய் நொந்துபோனுன் முந்திவசதியில் இருந்தானும். இப்பகஷ்டப்படுகிற போது பழைய நினைவுதானே வரும்'

என்று வாய்க்கு வாய்சொல்லுவாள்.

'அந்தக்காலத்தில் எங்க மலையில என்னிடம்தான் நிறைய காசு கழஞ்சு இருந்திருச்சு இ விரவாய் மூட்டை தூக்குவேன்.கல்லுடைப்பேன் அதிகாலையில அரிசியும் மாவும் மீனுமாய் வீடு வருவேன், எம் புள்ளைகளுக்கெல்லாம் வயிறு நெறைய சோறு போடுவன். கோழி பண்ணை எல்லாம் வைச்சிருந்தேன். பாலும்பழமும் முட்டையும் கொடுத்து எம் புள்ளைங்களை வளர்த்தேன் எம் மகளுக்கு எட்டுப்பவுனுல பதக்கம் சங்கிலி செஞ்சுபோட்டு ஆறுயிரம் காசுகொடுத்து கலியாணம் முடிச்சு வைச்சேன் மவ் கூறைப்புடவை இந்தியாவிலிருந்து வரவழைச்சேனுக்கும் சரிகைப்புடவை ஆமாங்க...சரிகைப் புடவைங்க அதுக்குமட்டும் அறுநூறு ரூபாய் ஊர் மெச்ச... எங்க தோட்டமெல்லாம் திரள கண்ணுலம் நடத்தினேனுங்க அப்படி ஊர் மெச்ச வாழ்ந்தவனுங்க நான்'

என்று எனக்கும் சொல்வான் சொல்லும்போது அவன் கண்கள் கனவில் மிதப்பது போல் ஏதோ நினைவுலில் லயித்திருக்கும். உணர்ச்சி பூர்வமாய் அவன் சொல்லும் போது அப்படி ஊர் மெச்ச சிறக்க இருந்தவனுக்காஇந்தக் கதி என்றுமனம் நெகிழும்


வேலை ஓய்ந்த நேரமெல்லாம் அவனது பழைய கதைகளை கமலத்துக்கு சொல்லுவான்.

அவளுக்கும் ஒருபொழுது போக்கு என்பது போல அவனது கதைகளைகேட்டுக் கொண்டிருப்பாள்.

இன்றைக்கு— நான் கொஞ்சம் சோர்வாக வெளிவராந்தாவில் ஈஸிசேரில் படுத்திருந்தேன். உள்ளே முத்து தன் பழைய கதைகளை சொல்லிக் கொண்டிருக்கிறுன்,

விசிறியால்விசிறிக் கொண்டிருந்தநான் படலை திறக்கும் சத்தம் கேட்டுதிரும்பினேன்

(7-ஆம் பக்கம் பார்க்க)



## இலட்சிய இதயங்களோடு..

# வரலாற்றேட்டில் வரைந்த உண்மைகள்

சென்ற சனிக்கிழமை 22ந் திகதி யாழ் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற ஐந்து அரசியற் கட்சிகளின் கூட்டம் பலவகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. அக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்கு என்ன என்பதை இயக்கத்தின் அச்சாணியான இலட்சிய இதயங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சில மாதங்களுக்கு முன் மாவட்ட அபிவிருத்திசபைச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, சென்றவாரம் நான் விளக்கியது போல அச் சட்டத்தினால் நாம் பெறக்கூடிய சில நன்மைகளைக் கருத்திற்கொண்டு, அச் சட்டத்தை ஆதரித்துப் பேசினோம்—வாக்களித்தோம். எம்மீது குற்றம் காணக் காத்திருந்த சிலரும், எமது இளைஞர்களின் மனங்களைக் குழப்பி அதன்மூலம் அவர்களைத் தம்மோடு சேரவைக்கலாம் என்ற நப்பாசையால் உந்தப்பட்ட சில இடதுசாரி இயக்கங்களும், ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்துவிட்டோம் என்று உரக்கக் குரல் எழுப்பினர். தமது அர்த்தமற்ற கூக்குரலுக்குச் சித்தாந்த அடிப்படையையும் காட்டச் சிலர் முன்வந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை முதலாளி வர்க்கமென்றும் தமது வர்க்கத்தோடு சேர்ந்து விட்டதென்றும் பிதற்றினர். நம்மவர் சிலரும் இதற்கு ஒத்தூதினர்.

கடந்த முப்பதாண்டு வரலாற்றையே இந்த வாதத்திற்காகத் திரித்து எழுதினர். தந்தை செல்வா அவர்களால் வளர்க்கப்பட்ட ஏடே இந்த திரிக்கப்பட்ட வரலாறுகளைச் சில சந்தர்ப்பத்தில் வெளியிட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருக்கும்போது எவ்வித போராட்டமும் நடத்தாது ஆதரிப்பதும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துவதுமே தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் அதற்கு முந்திய தமிழரசுக் கட்சியினதும் செயல் என்பதே அவர்களின் பிரசாரமாகும். இந்த மாபெரும் வரலாற்றுத் திரிப்பை இலட்சிய இதயங்களுக்கு விளக்கவேண்டியது என் கடமை என்று கருதுகிறேன்: 1948ம் ஆண்டு தொடக்கம் தமிழ் அரசியல் அரங்கில் நடைபெற்ற இயக்கங்கள், போராட்டங்கள் எல்லாவற்றிலும் நெருங்கிய பங்குகொண்டிருந்தவன் என்ற வகையில் இதை ஆதாரபூர்வமாக நிலைநாட்டும் உரிமையும் எனக்கு உண்டு என்று கருதுகிறேன்.

மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்த குடியுரிமைச் சட்டங்களை 1948ம் ஆண்டில் நிறைவேற்றிய கட்சி ஐக்கிய தேசியக் கட்சியேயாகும். அதை எதிர்த்துப்பேசி வாக்களித்ததைத் தொடர்ந்தே தந்தை செல்வநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தார். அந்த ஆட்சியின் சார்பில் தேசாதிபதியாக்கப்பட்ட சோல்பரிப் பிரபு யாழ்ப்பாணம் வந்தபோது 1950ம் ஆண்டிலேயே அவருடைய வருகையைப் பகிஷ்கரிக்குமாறு நாம் பிரசாரம் மேற்கொண்டோம். 'தமிழினத்தின் வைரியை வரவேற்காதீர்' என்ற தலைப்பில் நானே தயாரித்த துண்டுப்பிரசுரம் கட்சிசார்பில் வெளியிடப்பட்டு யாழ்ப்பாணமெங்கும் விநியோகித்தோம்.

1951ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் பிதா திரு. டி. எஸ் சேனநாயக்கா யாழ்ப்பாணம் வந்தபோது அந்த வருகையையும் பகிஷ்கரித்தோம்—எதிர்ப்பிரசாரத்தைமேற்கொண்டோம்

1953ம் ஆண்டு பங்கீட்ட சிபின் விலையை திரு டட்லி சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதிகரித்த போது லங்காசம சமாசக்கட்சி, காம்யூனிஸ்ட்கட்சி ஆகிய வற்றோடுசேர்ந்து ஆவணிமாதம் 12ந் திகதி ஹர்த்தாலை நடத்தினோம். லங்கா சமசமாஜக்கட்சியின் வரலாற்று நூலில் திரு வெஸ்லி குணரத்தனா, 'இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பினால்தான் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது' என்று குறிப்பிட்டுள்ளார்.

1954ம் ஆண்டு பிரதமர் சேர் ஜோன், கொத்தலாவல யாழ்ப்பாணத்தில் பவனிவந்த நேரத்தில் சரித்திரத்தில் முதன் முறையாக அவருக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினோம். தமிழரசு வாலிப முன்னணித் தொண்டர்கள் பலர் பொலீசாரின் குண்டாந்தடிகளினால் அடிபட்டு இரத்தம் சிந்தினர். 1956ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ந் திகதி களனியில் ஐக்கிய தேசியக்கட்சி தமது மொழிக் கொள்கையைமாற்றி தனிச்சிங்களமே தன்கொள்கை என்று முடிவெடுத்தது. ஆனால் கட்சியின் அந்த முடிவை எதிர்த்து 20ந் திகதி வடகிழக்கு மாகாணங்கள் எங்கும் வெற்றிகரமான ஹர்த்தாலை நடத்தினோம்-இவற்றிலிருந்து ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியிலிருந்த எட்டு ஆண்டுகளும் அந்த ஆட்சிக்கு எதிராகப் பாராளுமன்றத்திற்குள் மாத்திர மன்றி வெளியே ஹர்த்தால் 'பகிஷ்காரம்' கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் போன்ற நேரடி நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டோம் என்பது தெளிவாகும்.

1956ம் ஆண்டு திரு பண்டாரநாயகா ஆட்சி பீடமேறித் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியதும் அதைத் தொடர்ந்து நாம் மேற்கொண்ட சத்தியாக்கிரகம் திருமலை யாத்திரை, சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம் அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி முதலிய போராட்டங்களும் நாடறிந்தவை, 1960ம் ஆண்டு மார்ச்மாதம் தேர்தலில் ஐ. தே. கயும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் போதிய பாராளுமன்றப் பலமற்றிருந்த நேரத்தில் எமது உதவியை நாடின. இருகட்சிகளுக்கும் சில அடிப்படைக் கோரிக்கைகளைத் தந்தை செல்வா விடுத்தார். கொள்கையளவில் அவற்றை ஏற்றுக்கொண்ட சுதந்திரக் கட்சியோடும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளோடும் சேர்ந்து 1960 ஏப்ரல் மாதம் டட்லி சேனநாயக்காவின் ஆட்சியை வீழ்த்தினோம். திரு. சி. பி. டி. சில்வா தலைமையில் ஆட்சி அமைவதை ஆதரிப்போமென்று தந்தை செல்வாவும், டாக்டர் என். எம் பெரராவும், டாக்டர் விக்கிரமசிங்காவும் கையெழுத்திட்டுத் தேசாதிபதி சேர். ஒலிவர் குணத்திலகாவுக்கு கடிதம் எழுதினர். ஆனால் அவர் பாராளுமன்றத்தைக் கலைத்து 1960 ஆடியில் மீண்டும் தேர்தலை நடத்தினார்.

அத்தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் பெரும்பான்மையைப் பெற்ற சுதந்திரக்கட்சி கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறியமையால் அந்த அரசை எதிர்த்து 1961ம் ஆண்டு மாபெரும் சத்தியாக்கிரகத்தை நடத்தினோம். சுதந்திரக்கட்சியினர் 1960 ஏப்ரல் மாதம் எமக்குக் கொடுத்த வாக்கைக் காக்கத் தவறிய காரணத்தினால் அக்கட்சியை மீண்டும் நம்பி ஆதரவளிப்பதைத் தமிழ் மக்கள் விரும்பாத காரணத்தினால், தந்தை செல்வா விடுத்த கோரிக்கைகளை ஏற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட திரு டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்திற்கு 1965ம் ஆண்டு ஆதரவு கொடுத்தோம் அந்த அரசாங்கமும் மாவட்ட சபைகளை நிறுவுதல் பற்றிய வாக்குறுதியை நிறைவேற்றத்தவறிய பின், வேறு சில கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1969ம் ஆண்டு மீண்டும் எதிர்க்கட்சிக்குச் சென்று அந்த அரசாங்கத்தை எதிர்த்தோம் இந்த வரலாற்றைச் சிறிது ஆராயக் கூடிய நேரிய உள்ளங் கொண்டோர் யாராவது நாம் ஐ. தே. க. சார்பாக வர்க்க உறவோடு செயற்பட்டோம் என்று கூறுவார்களா? உண்மையில் உறங்குவோரை எழுப்பிவிடலாம் ஆனால் உறங்குவதுபோல நடிப்பவரை எழுப்பவே முடியாது விழித்திருந்து எல்லாவற்றையும் பார்த்து அறிந்து கொண்டு, பாலை உண்ணும்போது கண்களை மூடிக் கொள்ளும் பூனை போலத், தலைமையைத் தூற்றும் ஒரே நோக்கத்திற்காக உறங்குவது போல நடிப்போரை இலட்சிய இதயங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

1977ம் ஆண்டுத் தேர்தலின் பின் ஐ. தே. க முன்னெப்போதும் இல்லாத பெரும்பான்மை பலத்தோடு ஆட்சிபீடமேறியது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி துகளாக நொருக்கப்பட்டது. இடதுசாரிக் கட்சிகள் இருந்த இடம் தெரியாமல் ஒழிக்கப்பட்டனர். கட்டுக்கோப்பான பலத்தோடு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பணியவைப்பதற்காகத் தீவிர சிங்கள சக்திகள் தேர்தலின் பின் ஒரு மாதத்திற்கிடையில் தமிழ் இன சங்காரத்தில் இறங்கினர். நாம் மிகுந்த உள்ள உறுதியோடு அந்த நெருக்கடியிலிருந்து எம்மினத்தைச் சுதந்திரதாகம் குன்றாத இனமாகக் காத்து எடுத்தோம். எதிரியின் பலத்தை அறிந்தே எந்த இயக்கமும் தன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற அறிவு பொறுப்பு வாய்ந்த தலைமைக்கு அத்தியாவசியம். அத்தகைய சிந்தனையின்றிச் சில இயக்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலனாக நடுத்தெருவில் நிற்கும் பல்லாயிரம் மக்களைப் பார்க்கின்றோம். அப்படியிருந்தும் இன்றைய அரசு வவுனியா மாவட்டத்தைச் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக்க நடவடிக்கை எடுத்தபோது பாராளுமன்றப் பகிஷ்காரத்தை மேற்கொண்டோம் பழைய நிலை சட்டபூர்வமாகத் திரும்பவும் நிலைநாட்டப்படும் என்ற உறுதியின்பேரில் பாராளுமன்றம் மீண்டோம். அபிவிருத்திச்சபைச் சட்டத்தின் மூலம் அந்த எல்லைகளை மீளப் பெற்றோம் இவை யூ என் பி சார்பு நடவடிக்கைகளா அல்லது இனநலனைப் பேணும் பொறுப்பு வாய்ந்த தலைமையின் நடவடிக்கைகளா என்பதை இலட்சிய இதயங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இப்போது அரசின் பொருளாதார நடவடிக்கைகளினால் உயர்ந்துவிட்ட வாழ்க்கைப் பளுவைத் தாங்கமுடியாது மக்கள் பொங்கி எழும் நிலை ஏற்பட்டு வருகின்றது. இதை எதிர்நோக்கி ஆட்சிபீடம், அரசியலுரிமை பறிப்பு, அடக்குமுறைச் சட்டம், தொழிற்சங்கங்களை நசுக்குதல் ஆகிய செயல்களை மேற்கொண்டிருக்கிறது இவற்றை எதிர்ப்பதில் ஏனைய மக்களோடு ஒத்துழைக்க வேண்டியது எமது கடமையாகும் அந்த நோக்கத்தோடு நடாத்தப்பட்டதே 22-ந் திகதிக் கூட்டமாகும்

இன்று ஆட்சிபீடத்திற்கு எதிரான சக்தியாகப் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் நாம் பலத்தோடு இருப்பதால் ஏனையோர் எம் உதவியை நாடுகின்றனர். நேர்மையான அரசியல் பாதையில் கொள்கை அடிப்படையில் நாம் எடுத்த நடவடிக்கைகளுக்காக நன்றி கூறுகின்றனர் இதை நமது மக்கள் தப்பாகப் புரிந்து கொள்ளக் கூடாது. நாம் மற்ற கட்சியோடு கூட்டுச் சேர்ந்துவிட்டதாக யாரும் நினைத்துவிடக்கூடாது இப்படி ஒரு கருத்தை ஏற்படுத்திக் கடந்த ஆட்சிக் காலத்தில் இன விரோதிகளாக இயங்கிய சில சக்திகள் மீண்டும் தலைதூக்கப் பார்க்கின்றன இதற்கு விடுதலை வேட்கை கொண்ட மக்கள் இடம் கொடுக்கக்கூடாது.

இதனால் தான் சில வாரங்களுக்கு முன் இங்குள்ள சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் தனித்து ஏற்பாடு செய்த கூட்டத்தில் நாம் பங்குகொள்ள மறுத்தோம் அவரவரை எங்கு வைக்கவேண்டும், எந்த அளவுக்கு உறவுகொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து நாம் செயற்பட வேண்டும் நாய் வாலை ஆட்டமுடியுமே தவிர வால் நாயை ஆட்டவிட முடியாது. இதைப் புரியாத எமது முன்னாள் அன்பர் சிலர் அவசரப்பட்டு அல்பிரட் துரையப்பாவுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டத்தில் கலந்துகொள்ள நேரிட்டதைப் போல இனியும் நடைபெறாது நாம் புத்தியுடன் இயக்கத்தைச் சரியான பாதையில் நடத்திச் செல்லவேண்டும்.

**அண்ணன் அமிர்**

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பில் தமிழும் ஒரு தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப் படவில்லையென யார் சொன்னார்கள்?

அண்மையில் தமிழகம் சென்றிருந்த அமைச்சர் இராசதுரை ''எங்கள் நாட்டில் தமிழும் ஒரு தேசிய மொழி'' என பீற்றித் தள்ளியிருக்கிறார்.

தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சரின் இந்தப் பேச்சைக் கேட்டு தமிழக மக்கள் தலையாட்டியிருக்கிறார்கள் - அவர்களுக்கு எல்லாம் தெரியும்!

இனவெறி பிடித்த சிங்கள அரசு — இன்பத் தமிழையும் — தமிழரையும் என்ன பாடு படுத்துகிறது என்ற விபரமெல்லாம் அவர்கள் நன்கே அறிந்து வைத்திருக்கிறார்கள்! இல்லையென்றால் .........

1957 ல் அறிஞர் அண்ணாவும் 1977 ல் கலைஞர் கருணாநிதியும் அப்படியொரு பிரமாண்டமான சனத்திரளை சென்னை மாநகரிலே கூட்டியிருப்பார்களா? தமிழக முதல்வர் திரு. எம். ஜி ஆர். ஈழத் தமிழருக்காதரவாக ஓர் தீர்மானத்தை சட்டசபையில் கொண்டுவர வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது!

தமிழ்மொழி அமுலாக்கும் அதிகாரத்தை தனது கரத்தில் வைத்துக்கொண்டிருக்கும் திரு இராசதுரையின் அமைச்சிலிருந்தே சிங்கள மொழியில் கடிதம் அனுப்பப்படுவதை பட்டிருப்பு பா. உ. திரு பூ. கணேசலிங்கம் பாராளுமன்றத்தில் அம்பலமாக்கிய பின்னும் — ''தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து தந்திருக்கிறோம்'' என்று மட்டக்களப்பின் 'மாண்புகள்' கோரஸ் பாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

தமிழ் மொழி அமுலாக்கலின் 'அழகு' பற்றி இலங்கையின் பிரபல நாள் ஏடான 'வீரகேசரி' (19-11-80) தனது ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது.

## மக்கள் என்ன மடையரா?

''ஜனநாயக சோஸலிஸக் குடியரசு அரசியலமைப்பு அமுலுக்கு வந்து பல வருடங்களாகி விட்டபோதும், அதில் தமிழ்மொழிக்கு வழங்கப் பட்டுள்ள தேசிய மொழி அந்தஸ்து இன்னமும் சரிவர அமுல் நடத்தப்படாதிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது.''

அரசு சார்பு ஏடான 'தினபதி' கூட அவ்வப்போது அரசாங்கத்தால் தமிழ் மொழி எப்படியெல்லாம் புறக்கணிக்கப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை!

தனிப்பட்ட முறையில் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமக்கு அனுப்பப்படும் தனிச் சிங்களக் கடிதங்களால் பல இன்னல்களை அடைகின்றார்கள். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக — களுவாஞ்சிக்குடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் படிப்பிக்கும் திரு. வி. த. குமாரசாமி ஆசிரியர் அவர்களுக்கு 5-8-80 ல் அனுப்பப்பட்ட சிங்களக் கடிதம் சம்பந்தமான செய்தியை எமது உதயசூரியன் (24-10-80) இதழில் வெளியிட்டிருந்தோம்.

உண்மை இவ்வாறிருக்க — ஆளாள வந்த சிங்கள அரசும் — அதன் அமைச்சர்களான திருவாளர்கள் இராசதுரையும் தேவநாயகமும் 'மொழிப் பிரச்சனையை முற்றாகத் தீர்த்துவிட்டோம்' என்று முழங்குவது சகிக்கமுடியாத அண்டப்புளுகு என்பதில் சந்தேகமேயில்லை!

எதனை நாம் சொன்னாலும் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் —எப்படியும் அவர்களை ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் பேசியும் — பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தும் வரும் அமைச்சர்களே!

மக்கள் மடையர்களல்ல —உங்களை அவர்கள் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை உன்னிப்பாகக் கவனித்து வைத்திருக்கிறார்கள்.

83-ம் ஆண்டு எப்போது வருமென ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும் அவர்கள் — நீங்களெல்லாம் வீட்டுக்குச் செல்லவிருக்கும் அந்நாளை நிச்சயமாக தீபாவளித் திருநாளாகவே கொண்டாடி மகிழப்போகின்றார்கள்!

ஆம் — இருள் அழிந்து ஒளி உதயமாகப் போகும் அந்நாள் உன்னதமான ஒரு தீபாவளியே தான்!

**ஆசிரியர் பேசுகிறார்**

# இழந்த நாட்டை மீட்பதே எமது இலட்சியம்

## நாடாளுமன்றத்தில் 'நவம்' முழக்கம்!

**இந்த நூற்றாண்டில் தான் அந்நிய படைகள் கிழக்கு நோக்கி படையெடுத்து வந்தன. அச்சமயத்தில் இலங்கையில் கோட்டே கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இராச்சியங்கள் இருந்தன. அதனை நினைவூட்ட விரும்புகின்றேன்.**


**யாழ்ப்பாண தமிழ் இராச்சியத்தை போர்க்களத்தில்தான் சங்கிலி மன்னன் இழந்தான். அவனது குருதி மண்ணில் பாயும்போது என்றாவது இந்த மண்ணில் ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றி இழந்த தமிழ் இராச்சியத்தை மீட்டெடுப்பார்கள் எனக் கூறியதாக வரலாறு உள்ளது.**

**இவ்வாறு — சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினம் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில்-**

'நான் இன்றைய விவாதத்தில் கலந்துகொள்ளவேண்டுமென எண்ணியிருக்கவில்லை. ஆனால் கைத்தொழில் அமைச்சர் பேசியபின்னர் என்னால் பேசமுடியாமல் இருக்க முடியாது நாம் வடக்கில் பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதாகவும் அதற்குப் பின்னணியில் இருந்து இயங்குவதாகவும் கைத்தொழில் அமைச்சர் சொன்னார் நாம் அஹிம்சை முறையில் நம்பிக்கைகொண்டவர்கள். இது அணுஆயுத யுகமாக இருக்கலாம். ஆனால் அதைவிட பலம் வாய்ந்தது அகிம்சா ஆயுதமாகும். அதனையே நாம் எமது விடுதலை போராட்ட ஆயுதமாகப் பயன்படுத்துவோம்.

'இந்த நாட்டின் இனப் பிரச்சினைகளை 1974ம் ஆண்டிலிருந்து பார்க்கக்கூடாது. 14ம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து நாம் வரலாற்றை நோக்கவேண்டும். இந்த நூற்றாண்டில்தான் அந்நிய படைகள் கிழக்குநோக்கி படையெடுத்து வந்தன. அச்சமயத்தில் இலங்கையில் கோட்டே, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இராச்சியங்கள் இருந்தன. அதனை நினைவூட்ட விரும்புகின்றேன். யாழ்ப்பாண தமிழ் இராச்சியத்தை போர்க்களத்தில் தான் சங்கிலி மன்னன் இழந்தான்.

'அவனது குருதி மண்ணில் பாயும்போது என்றாவது இந்த மண்ணில் ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றி இழந்த தமிழ் இராச்சியத்தை மீட்டெடுப்பார்கள் எனக் கூறியதாக வரலாறு உள்ளது. போர்த்துக்கேயரின் படைப் பலம் தமிழ் இராச்சியத்தை அடிமைப் படுத்தியது. அடுத்து கோட்



டே இராச்சியமும் படை பலத்தால் அடிமைப்படுத்தப் பட்டது.

பின்னர் வந்த ஒல்லாந்தர் ஒப்பந்தத்தின் கீழ் இந்த இராச்சியங்களை தங்களது நிருவாகத்தின் கீழ் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு அடுத்து வந்த ஆங்கிலேயரிடம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைத்தனர். காலப் போக்கில் கண்டிய இராச்சியமும் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டது. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் விருப்பத்தினால் ஒன்றுசேரவில்லை அந்நிய ஆட்சியாளர்களால் ஒன்று சேர்க்கப்பட்டனர்.

ஆங்கிலேயர் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் ஆட்சி அதிகாரம் சிங்கள மக்கள் கைக்குச் சென்றது. 400 ஆண்டுகால அடிமை வாழ்வின் காரணமாகத் தமிழர்கள் தங்களது சுதந்திரத்தை மறந்துவிட்டனர். மொழி, வாக்குரிமை ஆகியவற்றையும் வாழும் பிரதேச உரிமையையும் பாதுகாத்துக்கொண்டு சமஷ்டி ஆட்சியின் கீழ் சமத்துவத்துடன் வாழ விரும்பினர்.

'1956ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார். அப்போது இச்சபையில்பேசிய காலநிதி. கொல்வின் ஆர். டி சில்வா, தனது ஆழ்ந்த அரசியல் புலமையைக் கொண்டு, ஒருமொழி இரண்டு நாடுகளை உருவாக்கும். இரு மொழி ஒரே நாட்டைப் பாதுகாக்கும் இச்சட்டத்தின் மூலம் தமிழர்கள் மறந்துவிட்ட சரித்திரத்தை நினைவுபடுத்துகிறீர்கள் அவர்கள் முன்பு தனி இராச்சியத்தைக்கொண்டிருந்தார்கள். மீண்டும் அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அவர்கள் செல்வநாயகத்திற்கோ, பொன்பலத்திற்கோ, சுந்தரலிங்கத்திற்கோ, சிலை வைக்க மாட்டார்கள். முதலில் உமக்குத்தான் சிலை வைப்பார்கள் என திரு பண்டாரநாயக்காவைப் பார்த்துக் குறிப்பிட்டார்.

'சென்ற பொதுத் தேர்தலின் போது எமது மக்கள் போர்க்களத்தில் போர்த்துக்கேயரிடம் இழந்த ஆட்சியுரிமையைப் பெற்றெடுங்கள் என எமக்கு உத்தர விட்டார்கள் பெரும்பான்மைப் பலத்தைத் தந்தார்கள்.

அப்படியான அரசியல் சூழ்நிலையில்தான் நாம் இங்கிருக்கிறோம் இந்நிலையில் இப்பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்வு காணமுடியுமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. அதற்கு நல்லதோர் வாய்ப்பை நாம் பெற்றோம். செக்கோஸ்லாவேக்கிய நாட்டுப்பாராளுமன்றத் தூதுக்குழு இலங்கை வந்திருந்தது இந்த நாடு இரு இனங்களை செக்ஸ் லவாக் என்ற இரு இனங்களைக் கொண்டது. செக் மக்கள் சனத்தொகையில் 80 சதவீதமானவர்கள். ஸ்லவாக்மக்கள் 20 வீதமானவர்கள் நிலப்பரப்பில் செக்மக்கள் 78 வீத இடத்திலும் ஸ்லவாக் மக்கள் 22 வீத இடத்திலும் வாழ்கின்றனர் அங்கு 1948ம் ஆண்டு முதல் தனி ஆட்சியும் கம்யூனிஸ அரசியல் கட்டுக்கோப்புமே இருந்தது இருந்தும் இனப்பிரச்சனை

7-ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் சக்தியை மதிப்போம்

# புரட்சி இயக்கத்தை வளர்ப்போம்

- மாவை சேனாதிராசா

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இதனை அன்று ஆமோதித்துப் பேசிய அமரர் வன்னிய சிங்கம் சொன்னார்,

"ஆம் நாட்டைப் பிரித்துத் தனிச்சிங்களச் சட்டத்தால் அத்திவாரமிட்டு விட்டனர்கள். அதன் மீது தமிழரசைக்கட்டி முடிக்கும் வேலையை நாம் செய்வோம்" என்றார்

இதற்குப் பிறகு திரு. நவரத்தினம் அவர்கள் சுயாட்சி என்று தேர்தலின் போது தமிழினத்தின் கோரிக்கையை முன் வைத்து வந்தார்.

தமிழரசுக் கட்சியின் தொடர்ச்சியான போராட்டங்களினால் 1957 ல் பண்டா செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது பின்னர் கிழித்தெறியப் பட்டது.

1965 ல் டட்லி - செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது மூன்று ஆண்டுகளில் அதுவும் கைவிடப்பட்டது.

படிப்படியாகச் சிங்கள ஆட்சி பீடங்களின் அநீதிகள் கொடுமைகள், இனக்கலவரங்களின் விளைவுகள் உணர்வு பூர்வமாகவே சிங்கள மக்களிடமிருந்து தமிழ் மக்களைப் பிரித்து விட்டன.

இதன் விளைவுக தந்தை செல்வாவினதும் தமிழரசுக் கட்சியினதும் அரசியல் முதிர்ச்சி அதாவது அறிவில் விளைந்த அனுபவம் அனுபவதில் முதிர்ந்த அறிவு சரியான நேரத்தில் தமிழீழ சுதந்திரமே தமிழினத்தின் இலட்சியம் என்று அறிவிக்க வைத்தது. இது ஒரு திடீர் முடிவு அல்ல காலத்தின் தீர்வு என்றே நம்புகிறோம் இப்படித்தான் தமிழீழ இலட்சியம் வளர்ந்தது.

இதுவரை சிங்கள ஆட்சி பீடங்களின் அநீதிக்கெதிராக உரிமைக்குரல் எழுப்பி வந்தோம் உரிமைப்போராட்டங்களை நடாத்தி வந்தோம் அவ்வப்போது உண்ணாவிரதம் சத்தியாக்கிரகம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம், பொது வேலை நிறுத்தம் (ஹர்த்தால்) என்று பலவகைப்பட்ட இயக்கங்கள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்தன.

இயக்கத்தின் தொண்டர்கள் எத்தனையா கொடுமைகளை அனுபவித்திருக்கிறார்கள் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள், கண்ணீரும் செந்நீரும் விட்டே இயக்கத்தை வளர்த்தவர்கள் சிறைவாசத்தில் அனுபவித்த கொடுமைகள் எத்தனையோ. உயிர்களை பலிகொடுத்தவர்கள் எத்தனையோ பேர்

இப்படித்தான் இந்த இலட்சியமும் இயக்கமும் வளர்ந்தது. இன்றும் இலட்சியத்திற்கும் இயக்கத்திற்கும் நா என்ன செய்துவிட்டோம் என்று கேட்கிறோமே தவிர இதனால் நமக்கு என்ன பயனென்று இன்றுவரை நாம் கேட்டதில்லை.

உரிமைப் போராட்டங்கள் இற்றை வரை அஹிம்சை அடிப்படையில் நடைபெற்று வந்துள்ளன.

இடையிடையே புரட்சிப் போராட்டங்களும் வெடித்துள்ளன.

போராட்டக்களம் வரை எதிரிப்படைகளை எதிர்த்து



வெல்லும் வலிமைப்புரட்சி வரை வளர வேண்டியபுரட்சி இயக்கங்கள் கருவிலேயே சிதைந்து போனால் அது வேதனைக்குரியதுதான்.

ஆனால் ஆயுதபலத்தைவிட மக்கள் சக்தி என்று பெரியது தான் அந்தமக்கள் சக்தியின் நம்பிக்கையின்மீது புரட்சி இயக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும் நிச்சயமாக வேண்டும்.

பக்கள் சக்திக்குத் தலைமை தாங்கி நிற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழீத்தின் அரசியல் விடுதலையையும், மார்ஸிப வேலைத்திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார விடுதலையையும் முன்வைத்துப் போராடும் இயக்கம்.

இந்த இயக்கத்திற்குத் தலைமைதங்கி நிற்பவர்தன் தலைவர் அமிர் அண்ணன்.

1975 ம் ஆண்டுகாங்கேசன் துறைத் தொகுதி இடைத் தேர்தலில் அறிவித்தார் தந்தை செல்வா, தமிழீழம் தமிழர் இலட்சியம் என்று.

1976 ம் ஆண்டு வட்டுக் கோட்டை மாநாட்டிலே உதித்ததுதான் தமிழர் விடுதலைக்கூட்டணி - தமிழீழ இலட்சியத்தை தமிழீழ மக்கள் சார்பில் அந்த மாநாடு அன்றே பிரகடனஞ் செய்தது

அன்றேசொன்னார் தந்தை, தமிழீழ இலட்சியம் எனது காலத்தில் கைகூடாது போனாலும், நிச்சயம் அமிர்தலிங்கத்தின் காலத்தில் தமிழீழஇலட்சியம் நிறைவேறும் என்று தெரிவித்தார்.

போர்க்களத்திலேதான் தமிழீழத்தின் விடுதலை கிடைக்குமென்றால் அதற்கும் தலைமை தாங்கும் தகுதி தலைவர் அமிர் அண்ணனுக்கு உண்டு.

தமிழீழ இலட்சியம் எப்படி வளர்க்கப்பட்டிருக்கின்றதோ அதே போலத் தமிழ் மக்கள் சக்திக்கு தலைமை தாங்கிநிற்கும் த.வி.கூட்டணியும் போர்க்களத்திலும்போராடும் புரட்சி இயக்கத்தையும் கட்டி வளர்த்திட வேண்டும். இதற்கும் ஒரு காலகட்ட வளர்ச்சி வேண்டும். இது அவசியமும் காலத்தின் தேவையுமாகும்.

அல்லாது விட்டாலுங்கூட பொது எதிரியாகிய முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப்போராடத் தமிழீழத்தின் விடுதலையை மீட்டுச் சமதர்மத் தமிழீழம் நிறுவிடும் இலக்கில் இயங்கிடும் அனைத்துஇயக்கங்களும் மார்க்ஸியப் புரட்சிக் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்களும் கூட ஒன்றுபட்டுப் போராட வேண்டும். ஒரே தலைமையில் போராட வேண்டும்.

எது எப்படியிருப்பினும் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் சுதந்திரம் முதலில் வேண்டும். இது வானத்திலிருந்து விழக் கூடிய தல்ல தமிழ்த்தேசிய இனத்திடையே கட்டியெழுப்பப்பட வேண்டும் தமிழ் மக்களே போராடிப் பெற வேண்டும் சுதந்திரம்

விடுதலைப் போராட்டத்தில் இளைஞர்களின் பங்கு மிக அவசியமானது ஒரு சமுதாயத்தில் அறுபத்தைந்து வீதமானவர்கள் இளைஞர்கள்.

இளைஞர் சமுதாயம் புரட்சிப் பாதையில் விடுதலைக்குப் போராடப் புறப்பட்டு விட்டால் எந்த சக்தியுமே தடுத்து நிறுத்த முடியாது இந்த சக்தியைக் கட்டியெழுப்பும் பொறுப்பு எமக்குண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இதை நாம் செய்வோம்.

தமிழீழத்தின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்யும்போது தமிழினத்தைப் பாதுகாக்கும் சக்தி, பலம் எமக்கு வேண்டும். அந்த அளவுக்கு எமது அமைப்புக்கள் பலம் வாய்ந்தவை என்று சொல்லமுடியுமா? எனவே பலமான அமைப்பு வேண்டும் என்கிறோம்.

தம்பி நாகேஸ்வரன் தன் பேச்சிலே தெளிவாக கூறினார்

## சமதர்ம தமிழீழத்திற்கே எம் உயிர் என்பது உறுதி

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையிலே நம்பிக்கையுண்டு, உங்களிடத்திலே நம்பிக்கையுண்டு நீங்கள் செய்த தியாகத்தையெல்லாம்என்றும் மதிக்கின்றோம் ஆனால் தேர்தல் காலங்களில் மட்டும்இளைஞர்கள் உணர்ச்சி வசப்படுத்தப் படுகிறார்கள், பின் அவர்கள் இயங்காமல் விட்டு விடுகிறார்கள். அவர்களை யெல்லாம் விடுதலை போராட்டத்திற்கு தயாராகுங்கள் என்றுதான் மாவை அண்ணனைக் கேட்டுக் கொள்கிறோம், த.வி. கூட்டணியிலிருந்தோ, த.இ. பேரவையிலிருந்தோ பிரிந்து இயங்குவதை நாம் ஒரு பொழுதும் விரும்பவில்லை. அப்படி நாம் பிரிந்து சிதறிப் போனால் எமக்கே பெலவீனம். தமிழீழத்தின் விடுதலையும் பின்தள்ளப் பட்டுவிடும் என்பதை உறுதியாக் கூறுகின்றோம்."

என்று தம்பி கூறிய வார்த்தைகளை நாம் வரவேற்கிறோம்.

"மாவட்ட அபிவிருத்திச் சபையைப் பயன் படுத்தவே வேண்டும் ஆனால் த.வி. கூட்டணி ஆதரித்து வாக்களித்திருக்கக் கூடாது" என்ற கருத்தையும் முன்வைத்தீர்கள்.

உண்மையிலேயே இந்த அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படத்தான் வேண்டும். ஆனால் தவறான விளக்கங்களிலிருந்து தவறான முடிவுக்கு வந்து விடாதீர்கள். தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளித்து விடாதீர்கள். ஏனென்றால் தனி மனிதரை நம்பாதீர்களென்று தனித்தனி மனிதர்கள் கூக்குரல் தருகிறார்கள்.

மாவட்ட அபிவிருத்திச் சபைச்சட்டத்தை த.வி. கூட்டணி ஆதரித்து வாக்களித்தமை பற்றிக்கருத்து வேற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கத்தான் செய்யும்.

அதிலும் சட்டமூலம் வரு முன்னரே அதில் என்ன இருக்கிறதென்பதைத் தெரியாமலே ஒரு பக்கச் சார்பான வாதம் பல மாதங்களாகத் திட்டமிட்டுக் கட்டி வளர்க்கப்பட்டுள்ளதும் இன்று கருத்து வேற்றுமைகளைத் தோற்றுவிப்பதற்கு ஒரு காரணமாகும்.

இதுவரை தமிழீழ இலட்சியத்தை எதிர்த்து வந்தவர்களே, புது முகங்கள் கூட மாவட்ட அபிவிருத்திச் சபையைக் கூட்டணி ஆதரித்தது தவறும். சரி அது அவர்கள் கருத்தாகட்டும்,

ஆனால் தமிழீழ இலட்சியத்தில் புகுந்து நிற்கிறார்களே அப்படியானால் தமிழ் இலட்சியத்திற்கு இந்த வேளையிலும் ஆதரவு கூடியல்லவா இருக்க வேண்டும்.

அப்படியல்ல த.வி.கூட்டணியைத் தகர்ப்பதில் இன்று பலர் ஒன்றுபட்டிருக்கிறார்கள் ஏதோ கூட்டணியை எல்லோரும் எதிர்க்கிறார்கள்என்பது போலக் காட்டுகிறார்கள். இதனால் மக்களிடத்திலே இயக்கத்திலே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறார்கள்.

இப்படிக் கூட்டணியைப் பலவீனப்படுத்துவதால் மக்களை நம்பிக்கையீனப்படுத்துவதால் தமிழீழ இலட்சியம் பின்தள்ளப்படுமே தவிர நாம் இயக்கத்தில் இலட்சியத்தில் பலமாக இருப்போமானால் இந்த அபிவிருத்திச் சபைகள் எம்மை என்ன செய்ய முடியும்?

த.வி. கூட்டணியைஉடைத்துப்புதிய தலைமையை உருவாக்க வேண்டுமென்று உருப்போட்ட மனிதனும் உண்டு சில ஏடுகளும் உண்டு.

மாவட்ட அபிவிருத்திச் சபையை மையமாகக் வைத்துக் கூட்டணித் தலைமைக்குக் களங்கங்கள் கற்பித்துவிட்டுக் கூட்டணியைக் குறுக்குவழியில் கைப்பற்றிவிடலாம் என்று திட்டம் போட்டவர்களுமுண்டு,

தமிழ் மக்கள் எங்கிருக்கிறார்களோ அங்கெல்லாம் கூ]

(அடுத்த இதழில் முடியும்)



# உள்ளம் திறந்து...

அன்புள்ள,
ஆசிரியர் அவர்கட்கு!

தமிழர் தலைவனும் அமிர் அண்ணன் அவர்கள் மீது தவறுகள் சில கூறி எம்மைத் தடுமாற வைத்தார் சிலர் இந் நிலை கண்டு எம் உள்ளம் கொதித்திட்டது வேதனையால்!

இவ்வேதனையைத் தீர்த்து எம் உள்ளமது குளிர உதயமான எம் ''உதயசூரியனே'' வாழ்க நீ!

எம் விடுதலை வண்டியாக ஓடிக்கொண்டிருந்த ''சுதந்திரனின்'' சாரதி மதி மயங்கி அறிவிழந்து வண்டியைப் பாதைமாறி ஓட்டுகின்றார். ஆனால் வண்டியில் அவர் மட்டுந்தான் செல்கிறார். வண்டியில் இருந்தவர்கள் இறங்கி நேர்வழியிலேயே செல்வதைச் சாரதி சற்றுத்திரும்பிப் பார்த்தாற்தானே தெரியும். என்ன செய்வது திரும்பிப் பார்க்கும் அளவிற்கு அவருக்கு அறிவோ சந்தியோ இல்லையே, எனவே வண்டிதான் திசைமாறியதே தவிர வண்டியில் இருந்த யாம் தொடர்ந்த பாதையையே தொடர்கிறோம் என்பதை எங்கே அறியப் போகிறார். அச்சாரதி நடந்த பாதையிற் தொடர்ந்து எம்மை உதய சூரியன் என்ற விடுதலை வண்டி ஏற்றிக்கொண்டு வேகமாய்ப் போவதை இப்போது அந்தச் சாரதி அறிந்திருப்பார் என நினைக்கிறேன்.

'தந்தை' எமது தாரக மந்திரம் அம்மந்திரம்தந்த தளபதி முன்செல்ல அவர் பின்னால் எம் தலைவர்களோடு எம் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்- கூடியசீக்கிரம் வண்டி நிலையான இடத்திற் தரிக்கும். அதுவரை எம்கொள்கை அதன் பின்னே நிலைத்தே இருக்கும். உண்மையை உணர்த்த உதயமான உதயசூரியனே உன் ஒளி மேன் மேலும் பிரகாசிக்கட்டும்.

ச. தர்மகுலசிங்கம்
5-ம் வட்டாரம்
நயினாதீவு.

●

ஆசிரியர், உதயசூரியன்.

ஐயா, தங்கள் பத்திரிகையைத் தொடர்ந்து வாசித்து வரும் வாசகன் என்ற முறையில் இம்மடலை வரைகின்றேன்.

எமது இயக்கத்தின் இலட்சியம்-செல்லும்பாதை போன்றவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது எமதுபத்திரிகை இலட்சிய இதயங்களோடு அமிர் அண்ணா சிறப்பான அறிவுடன் கூடிய உணர்ச்சியை என்போன்றபல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு ஊட்டி எழுதுகின்றார். அவருடைய எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அவருடைய இலட்சியப்பற்றையும் அவருக்குள்ள தமிழ் இலக்கிய அறிவையும் வெளிக்காட்டுகின்றன. அமிர் அண்ணாவின் சொல்லோவியத்தை உண்பதற்கென்றே வாராவாரம் காத்திருக்கும் இலட்சிய இதயங்களில் நானும் ஒருவன் அவருக்கு ஒரு சிறியவேண்டுகோள் எவ்வளவு பெரிய வேலைகள் இருந்தாலும் தயவுசெய்து ஒவ்வொருவாரமும் எம்முடன் எழுத்துக்கள் மூலம் பேசுவதை நிறுத்த வேண்டாம். இது உங்கள் அன்புத்தம்பியின் கண்டிப்பு நிறைந்த வேண்டுகோள்.

கவிஞர் காசியண்ணாவின் பறவைகளே பறவைகளே பல உண்மைகளை எமக்குப்போதிக்கின்றன. மற்றும் ஆசிரியர் பேசுகிறார் வாகரைவாணன் எழுதும் கட்டுரைபோன்றவையும் சிறப்பாக உள்ளன இவற்றை ஒவ்வொரு வாரமும் சேர்க்கவும்-

உதயசூரியன் வருகையால் தமிழ் ஈழம் விரைவில் மலரும் என்ற நம்பிக்கையுடன் விடை பெறும்.

முரசொலி மாறன்
உடுப்பிட்டி

●

ஆசிரியர்,
'உதயசூரியன் அவர்கட்கு!

வணக்கம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உரிமைக் குரலாகவும், எழுச்சிக் குரலாகவும் எழுந்துள்ள 'உதயசூரியன் ஏடு — தமிழ் மக்களின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் வளர்த்து, இன விடுதலைக்கு மேலும் உரமாக விளங்க வேண்டுமென நாம் வாழ்த்துகின்றோம்.

நன்றி

கே. ஜீவகதாஸ்.
சாவகச்சேரி.

அன்புள்ள உதயசூரியன்
ஆசிரியர், அவர்கட்கு
வணக்கம்!

தங்களின் உதய சூரியன் வார இதழில்மிகவும் தெளிவானபேச்சுக்கள் கட்டுரைகள் இடம்பெறுவதையிட்டு இலங்கையில் வாழும் ஈழத் தமிழ் மக்களும் வெளிநாட்டில்வாழும் ஈழத்தமிழ் மக்களும் பாராட்டுகிறார்கள்,

உதயசூரியன் ஒளிக்கதிர்களால் ஈழத்தமிழ் உலகுக்கு வெளிச்சம் தருவதை உலகம் எங்கும் எப்படிவிரும்பி வரவேற்கிறதோ அது போன்று உதயசூரியன் வார இதழ் மூலம் தமிழீழம் பெற்றுத்தர விருப்பம் தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு
சு. தனபாலன்
வத்தளை

●

அன்பான ஆசிரியர்,

2-11-1980 சுதந்திரன் இதழில், ஒரு இலட்சிய இதயம் எழுதியதாக வந்துள்ள, தலைவர் அமிருக்குப் பதில் கொடுப்பது போல உள்ள, கட்டுரை என்னை இந்த கடிதம் எழுத வைத்துள்ளது.

குறிப்பிட்ட கட்டுரையை எழுதியது எந்த கொம்மியூனிஸ்டோ, அல்லது சுதந்திரனது திருஸ்டியோ என்பது முதல்கணம் கேள்விக் குறியாக இருக்கிறது. ஏனெனில் ஒரு உண்மையான இலட்சிய இதயம் இப்படியாக ஒரு தலைவனுக்கு கடிதம் எழுத துணியாது. இருந்தும் அந்த இலட்சிய இதயத்துக்கு (அது உண்மையெனில்) இன்னொரு இலட்சிய இதயம் சில ஆலோசனை கூற விரும்புகிறது.

யாருக்கு யார் என்ன புத்திமதி கூறுவது, எவருக்கு எவர் எப்படி கடிதம் எழுதுவது என்று ஒரு மரபு இருக்கிறது. உமது கடிதம் உமது தலைவரையே (எழுதியது இலட்சிய இதயம் என்றால்) ஏதோ பகிடி பண்ணுவது போல அமைந்துள்ளது. ஏதோ இந்தியா சென்று எம்மைக் காட்டிக்கொடுத்துவிட்டதாய் ஒப்பாரி வைத்திருக்கிறது உமது இதயம். எமது இனம் எவ்வளவு சுயநலம் கொண்ட இனமாய் இருக்கிறது என்பது எமக்கு தெரியவேண்டும். எமது இனம் எவ்வளவு இனப்பற்றற்ற இனமாக இருக்கிறது என்பது எமக்கு தெரியவேண்டும். சந்தர்ப்ப வாதிகள் நிறைந்தது எமது இனம். சில நேரங்களில் நான் நினைப்பதுண்டு எமக்கு சுதந்திரம் அவசியமா என்று! சுதந்திரக் காற்றை சுவாசிக்க நாம் தகுதி படைத்தவர்களா? ஒவ்வொரு கட்சி கூட்டங்களை நடத்த எத்தனை பேரிடம் உதவி பெற்று கூட்டம் நடத்தினர் (செல்வா காலத்தில் கூட) அண்ணன் அமிர் என்பது அவருடன் கூட இருந்தவர்களுக்குத் தெரியும். இன்று ஏதோ தந்தையின் ஆன்மாவையும் இலட்சியங்களையும் தாங்கள் ஏதோ குத்தகைக்கு எடுத்தவர்கள் போன்று சுதந்திரன் கும்பல் அலட்டுகிறது.

இலட்சிய இதயத்துக்கு (?) நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் உமது சுதந்திரன் நினைக்கிறது போல் தெரிகிறது தான் ஏதோ சினிமா நடிகர்களையும் நடிகைகளையும் அறிமுகப்படுத்துவது போல் இலட்சியவாதிகளையும் அறிமுகப்படுத்தியதாக. 70 தொடக்கம் 1977 வரையிலான காலப் பகுதியில்

(8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மாணவர்களை யு. என். பி. அரசு புறக்கணிக்கிறது!

## வட்டுக்கோட்டை எம்.பி. 'திரு' குற்றச்சாட்டு!

''கடந்த ஆண்டு நடைமுறைக்குகொண்டுவந்துஇந்த ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட இலவச பாடப்புத்தகத்தில் சிங்கள மாணவர்களுக்கு 5 பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன. ஆனால் தமிழ் மாணவர்களுக்குஇரண்டுபுத்தகங்களே விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிஇந்த அரசாங்கம் பரபட்சம் காட்டுகின்றது. இந்த வருடத்துக்கான மூன்றும் தவணையும் முடிவடையப்போகின்றது. இதுவரை மிகுதிப்புத்தகங்கள்விநியோகிக்கப்படவில்லை இதுபற்றிபாராளுமன்றத்தில் கேட்க இருக்கின்றோம். இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதிபாராளுமன்ற உறுப்பினர் திரு தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவின்போது கௌரவவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்

அவர் தொடர்ந்து பேசும் போது—இக்கல்லூரி அதிபருடைய அறிக்கையில் இருந்து இக்கல்லூரியின் முன்னேற்றத்தைஅறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலைகளில் இப்பாடசாலையிலிருந்தே சென்ற வருடம் பல்கலைக்கழகத்திற்கு அநேக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அறியும்போது மட்டற்றமகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரிக்கு விளையாட்டு மைதானத்துக்கு 21 பரப்பு காணியையசுவீகரித்துக்கொடுத்திருக்கின்றேன். 32லட்சத்து20 ஆயிரம் ரூபா கட்டடங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றேன் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு என்னால் இயன்றவரையும் உதவி செய்வேன்.

இக்கல்லூரியில் ஆசிரியர்கள் பற்றுக்குறையாக இருப்பதை நான் அறிவேன். எனது தொகுதியிலுள்ள 53 பாடசாலைகளிலும் சுமார் 200 ஆசிரியர் பற்றுக்குறையாக இருக்கின்றனர், இதுபற்றி வடமாநிலக் கல்வி அதிபதியுடன் தொடர்பு கொண்ட போது வடமாநிலத்தில் சுமார் 1800 ஆசிரியர்கள் பற்றுக்குறையாக இருப்பதாகவும் வெளி மாவட்டங்களில் இருந்து 50 ஆசிரியர்கள் கூடவரமாட்டார்கள் என்றும் எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு ஆசிரியர்கள் தேவை என்பதை புள்ளி விபரத்துடன் தயாரிப்பதாகவும் விரைவில் அதனைக்கல்வி அமைச்சுக்கு அனுப்பப்போவதாகவும்கூறிய அவர். இதுபற்றி எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை பாராளுமன்றத்தில் கேட்டிருக்கின்றார்கள், என்றார் மேலும்.

எனது தொகுதியிலுள்ள கலைநகர் அராலிகிழக்கு ஆகிய இரண்டு, கிராமங்களிலும் தற்போது இளைஞர்கள் மின்சார விநியோக வேலைகளை சிரமதான மூலம் மேற்கொண்டு வருகின்றனர். 1981ம்ஆண்டுக்கான பன் நகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் மின்சார விநியோகத்திற்கே கூடுதலான நிதிஒதுக்கியுள்ளேன், ஏனெனில் மண்ணெண்ணெயின் விலை அதிகரித்துக்கொண்டு போகின்றது இதனால் மக்களின் கஷ்டங்கள் அதிகரிக்கின்றன.

எனது தொகுதியிலுள்ள காரைநகர், அராலி ஆகிய இடங்களில் குடிநீர் பிரச்சனை இருக்கின்றதுஇவற்றைத்தீர்ப்பதற்கான முயற்சிகளையும் எடுத்துள்ளேன்.

கல்லூரி அதிபர் திரு.கே. கே. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் திருமதி சிவநாதன் அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர்.

# இன விடுதலை இயக்கங்களை எந்தச் சக்தியாலும்

# அடக்கமுடியாது!

## ஐ. தே. க. மாவட்ட அமைச்சர் மன்சூர் அமெரிக்காவில் வாக்குமூலம் !

தென்னாபிரிக்க மக்கள் காலாதி காலமாக நிறப்பாகுபாட்டினால் அனுபவித்து வரும் மனிதாபிமான மற்ற அநீதியான இன்னல்களை அறிந்துள்ள சர்வதேச சமூகம் அவர்களுக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளது. இங்கு ஐ.நா. வின் பொதுக்கூட்ட நிரலிலுள்ள நிகழ்ச்சிகளில் இந்த விவகாரமே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்ற ஐ நா வின் பொதுக் கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனை எம்.பி. யுமான ஜனாப் ஏ ஆர். மன்சூர் 'தென்னாபிரிக்க அரசின் நிறப்பாகுபாட்டுக் கொள்கைகள்' என்ற தலைப்பில் இவ்வாறு கூறினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

ஐ.நா. வின் தீர்மானத்திலிருந்து இங்கு இடம் பெற்ற நிகழ்ச்சிகளில் சிலவற்றுக்கு அமோக உடன்பாடும், பொது அபிப்பிராயமும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இருந்தாலும் நிறப்பாகுபாட்டைத் தீர்ப்பதற்கு பல்வேறு பிரதிநிதிகளும் தெரிவித்துள்ள வழிமுறைகளில் சில பிரச்சினைகள் உள்ளன. இருந்தாலும் அரசியல் அநீதியானதும், எதிர்ப்புக்குரியதுமான நிறப்பாகுபாடு சர்வதேசரீதியாக கண்டிக்கப்பட வேண்டும் என்பதுவே இங்கு நடைபெற்ற விவாதத்தின் சாராம்சமாகும்.

தென்னாபிரிக்கா தனது மூல வளங்களைப் பயன்படுத்தாது கைவிட்டுள்ளதனால் அதன் பொருளாதாரம் ஓரளவே வளர்ச்சி அடைந்துள்ளது.

இனவெறி ஆட்சி தன்னை தனிமைப்படுத்திக் கொள்வதால் வளர்ச்சி அடைய முடியாது என்பதை விசேடகுழு இங்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

இராணுவத் துறையைப் பொறுத்த மட்டில் ஆட்சிக்கு எதிரான ஆயுதத்தடை முழு அளவில் அமுல்படுத்தப்படுவதும், மீள நடைமுறைப் படுத்துவதும் அவசியம். கட்டுப்பாடுகளை மீறும் செயல் இன்று பரவலாக இடம்பெற்று வருகிறது. ஆட்சியாளர்களுடன் பல்வேறு வெளிநாட்டுக்குழுக்கள் கொண்டுள்ள தொடர்பினால் இத்தகைய செயல்கள் இன்று எங்கும் வியாபித்து வருகின்றன

அயலிலுள்ள நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கை உட்பட நிறப்பாகுபாட்டு ஆட்சியாளரின் பதிலடிகளுக்கு மத்தியிலும் அண்டை நாடான சிம்பாவேயின் விடுதலைப் போராட்டம் சிம்பாப்மக்களுக்குவீரமிக்க வெற்றியைத்தேடித் தருவதில் முடிவடைந்துள்ளது.

தெற்கு ரொடீஷிய இன வெறி ஆட்சியின் மறைவு தென்னாபிரிக்க ஆட்சியின் இறுதி நிலையை ஆட்டங்காணச் செய்திருப்பதோடு நிறப்பாகுபாட்டு முறையில் எதிர்காலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள், சிறுபான்மை இனத்தவர்கள், வர்த்தகர்கள் ஆகியோர்களால் மேற்கொள்ளப்படும் கிளர்ச்சி நிறப்பாகுபாட்டை நீக்கி ஜனநாயக இனப்பாகுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென தேசிய ரீதியில் எழுந்துள்ள ஆவலுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

தேசிய விடுதலை இயக்கங்கள் சாதாரணமானவையல்ல அவை சரியான அமைப்பு முறைகளைக் கொண்டவை அவற்றை ஆயுதபலத்தால் அதிகாலத்துக்கு அடக்கி வைக்க முடியாது:

எனவே சர்வதேசசமுதாயம் தென்னாபிரிக்க மக்களின் முயற்சிகளுக்குப் பேச்சளவிலன்றி செயலளவில் உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

## இழந்த நாட்டை...

(4—ஆம் பக்கத் தொடர்)

தோன்றியது அப்போம்து அங்குகைத் தொழில் அமைச்சரைப் போன்றவர்கள் விட்டேனு பார் என்றனர். என்றாலும் 1960ம் ஆண்டு அங்கு சமஷ்டி ஆட்சி மலர்ந்தது இரண்டு பாராளுமன்றங்கள் உருவாகின. மேல்சபையில் இரு இனத்திற்கும் 50சதவீத சமத்துவம் வழங்கப்பட்டது எந்தச்சட்டமும் இச்சபையினால் அங்கீகரிக்கப்படாவிட்டால் சட்டமாகாது. இக்கிளர்ச்சியை தூண்டிவிட்டவர் என 1949ம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டவர்தான் இன்று அந்நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார்.

சுதந்திரம் எமது பிறப்புரிமை அந்த உரிமையைப் பெற நாம் எந்தத் தியாகமும் செய்வோம். இதனை வல்லரசுகள் பயன்படுத்திக்கொண்டு உள்ளே நுழைவதையோ இந்திய சமுத்திரப் பகுதியை அமைதியற்ற பகுதியாக மாற்றுவதையோ நாம் விரும்பவில்லை.

எமது மக்கள் எல்லோரும் அமைதியை விரும்புவார்கள், என்பதல்ல விடுதலைக்கு சிலர் வேறு வழியையும் நாடக்கூடும் எனவே இரு இனங்களும் இணக்கமாக சமத்துவத்துடனும் சம உரிமையுடன் ஒரே நாடாக வாழ்வதா அல்லது இருநாடுகளாக வாழ்வதா என்பதை அரசாங்கத்தின் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் என்பதைக்கூறி எனது உரையை முடிக்கிறேன்.

## மலையக அகதிகள் குடியிருக்க நிலம் வழங்கவேண்டும்

### வவுனியா சிவா அறிக்கை

வவுனியா மாவட்டத்தில் கடந்த இனக்கலவரத்தின் பின் குடியேறியுள்ள இந்திய வம்சாவழி மக்களில் 2300 குடும்பங்கள் பிரஜாவுரிமையற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் பிரஜா உரிமைக்கு மனுச் செய்தவர்கள்.

குறித்த 2300 குடும்பங்களின் தாவரிப்பில் 10659 பேர் தங்கியுள்ளனர். இவர்கள் அத்துமீறி குடியேறியுள்ள அரசாங்க காணியின் விசாலம் 3754 ஏக்கர்.

ஒரு ஏக்கர் தொடக்கம், இரண்டு ஏக்கர்வரை அரசாங்க காணியில் குடியேறி பல தனியார் துறை நிறுவனங்களின் உதவியுடனும் தங்கள் சொந்த பிரயாசையுடனும் காடு அழித்து கடந்த மூன்று ஆண்டு, காலமாக மானாவாரி பயிர்ச் செய்கை செய்து வருகின்ற குறித்த 2300 குடும்பங்களுக்கும் அண்மையில் நடைபெற்றஅத்துமீறி அரசாங்க காணியில் குடியேறியவர்களுக்கு காணி சட்டப்படி கொடுக்கிற காணிக்கு கச்சேரியில் உத்தரவுப் பத்திரம்வழங்குவது மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த 2300 குடும்பங்களும் அவர்களின் தாவரிப்பிலுள்ள 10659 மக்களும் இனக்கலவரத்தின் முன் மலையகத்திலே பல ஆண்டுகாலமாக தொடர்ந்து தொழில் செய்து வந்தவர்கள் இவர்கள் தாமாகவே விரும்பி மலையகத்தை விட்டு வெளியேறவில்லை 1977ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின்போது எந்த வித குற்றமும் இழைக்காத இவ் அப்பாவி மக்கள் பல இன்னல்களுக்குள் ஆக்கப்பட்டு சொத்து சுகம் அத்தனையும் இழந்து தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற வவுனியாமாவட்டத்துக்கு துரத்தப்பட்டவர்கள் அரசாங்கத்தினுடைய உதவி எதுவுமின்றி குடியிருப்பதற்கும் வாழ்வதற்கும் காணியை வெட்டி துப்பரவு செய்து பண்படுத்தியவர்கள் இவர்கள் வெட்டித் திருத்திய காணிகளை விட்டு எந்தக் கட்டத்திலும் வெளியேறுவதற்கு இவர்கள் சம்மதிகக மாட்டார்கள் இவர்களுக்கே இவர்களது காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வறிக்கையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப் பீடத்துக்கு சமர்ப்பித்து ஜனாதிபதியை பேட்டி காண்பதற்கு வவுனியா பாராளுமன்ற உறுப்பிர் முனைந்துள்ளார்.

## அந்தக் கனவுகளில் மட்டும் - - -

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கசங்கிய வெள்ளைச் சாரமும் மஞ்சள் சேர்ட்டுமாக பதினேழு பதினெட்டு வயதுமதிக்கத்தக்கவாலிபன்... அப்பட்டமான முத்துவின் சாயல்—

'ஐயா! முத்து இங்கே தான் இருக்கார்' தயங்கித் தயங்கிக் கேட்டான்.

'நீ ஆர்? முத்துவின்ர மோனு;'

'ஆமாங்க கோபாலன் பேர் அவரைப் பார்க்கணும்.'

அவனது பஞ்சடைந்தகோலம் எனக்குள் ஏதோ வேகத்தைத்தர 'ஒரு காலத்தில நல்லாய் வாழ்ந்த உங்களுக்கு இந்த நிலை வரவேண்டாம்பா, ஆறுதலுக்கு ஏதாவது சொல்லவேண்டும் என்பதற்காக சொன்னேன்

'நன்றாக வாழ்ந்தோமா என்று சலித்து விட்டுத்தொடர்ந்தான் அவன் எங்களைப் போல உள்ளவங்க எப்படிங்க நல்லா வாழ முடியும் உழைச்சு சாக என்றே ஆண்டவன்எங்களைப் படைச்சிட்டானே—பிறந்ததிலயிருந்து பட்டினியை பழக்கப்படுத்தினவங்க நாங்க. அப்படியிருக்க நாம் நாம்எப்படிங்க நல்லா இருப்பது...'

ஏக்கத்தோடு அவன் கூறியதைக்கேட்டதும்எனக்கு தூக்கி வாரிப்போட்டது.

'நீங்க முத்தி நல்ல நிலையில் இருந்ததாக முத்து சொன்னானே.'

'அவரு அப்படிதாங்க பிறந்ததிலிருந்து பசியோடயும் பட்டினியோடயும்போராடியவருக்கு எந்த சுகமும் கிடைக்கலீங்க நிஜமாய் கிடைக்காததை கனவிலயும் கற்பனையிலும் அனுபவிச்சுக் கொள்ளுவாரு தனக்கு ஒரு நாளும் கிடைக்க முடியாத சுகங்களை கிடைச்சதா சொல்றதில ஏதோ அற்பசுகத்தை அனுபவிக்கிறாரு இந்த அற்ப சந்தோஷம்தான் அவரை ஒரு சக்தியாக இயங்க வைக்கிறது. அவரை தப்பா நினைச்சுடாதீங்கய்யா வேணும்னு அவரு இப்படி பொய் சொல்லலை அவருக்கு இதில் ஒரு திருப்தி...'

'ஜிவ்' என்றஉணர்வு தொண்டைக்குள் வந்து அடைந்தது.

உள்ளே முத்துகமலத்திடம் சொல்வது மெலிதாய் காதில் கேட்கிறது. மக குடித்தனம் நடத்த வண்டி வண்டியாய் வெள்ளிப் பாத்திரங்க எல்லாம் அனுப்பினேனம்மா பசுமாடுளக கூட கொடுத்தேன். கோழிப் பண்ணையில் மட்டுமே ஒரு நாளைக்கு பத்துருபாவுக்கு வருமானம் கிடைக்கும். நான் ரொம்ப நல்ல நிலையில்......

இன்னும் தொடர்ந்தது. கனவு காணும் அவன் கண்கள் என் முன்னால் பள பளத்தது. பொய்கள் ஆனால் யாருக்கும் தீமை செய்யாத... பாதிப்பு இல்லாத... பொய்கள்.

இவர்கள் கனவுகளில் மட்டுமே வாழ்பவர்கள்.

வெறும் கனவுகளிலேயே அற்ப சந்தோஷத்தைக் காண்பார்கள்.

ஓ... இவர்களது கனவுகளை சிதைக்க வேண்டாம்.

நான் என்ன சொல்வேனோ என்ற பயத்துடன் நின்ற கோபாலனைப் பார்த்து இதமாய்... ஆதரவாய் சிரிக்கிறேன்.

(யாவும் கற்பனை)

# அகதிகளை வெளியேற்றும் முயற்சி அநீதியானது

## ஜனாதிபதிக்கு திரு. சி. வி. வேலுப்பிள்ளை கடிதம்!

தோட்டங்களில் குறைவான வேலை நாட்களாலும் 1977ல் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்திலும் பாதிப்புக்குள்ளான தோட்டத்தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறி வடக்கு கிழக்கு பகுதிகளில் தஞ்சம் கோரி குடியேறி தொழில் செய்யலாயினர். தற்போது இம்மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்த சில சக்திகள் முயல்வதை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கட்கு தொழிலாளர் தேசிய சங்க பொறுப்பாளர் திரு. சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:—

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குடியேறி தொழில் செய்து கொண்டிருக்கும் இலங்கை பிரஜையல்லாத இந்திய வம்சாவளி மக்களை அப்பகுதிகளிலிருந்து உடன் வெளியேற்றப்படுவார்களென காணி அமைச்சின் முக்கிய பிரமுகர் அறிவித்துள்ளார்.

பெரும்பான்மையானமக்கள் 1977ல் நாட்டிலேற்பட்ட கிளர்ச்சியின் போதும், அதற்கு முன்னும் பின்னும் உருவான வேலைக்குறைப்பினாலும் பாதிக்கப்பட்டமக்களேயாவார்கள்.

இலங்கைப் பிரஜாவுரிமைக்கும் இந்தியா பிரஜாவுரிமைக்கும் மனு கோரி விண்ணப்பம் செய்தவர்களே இதில் அடக்குவர். பாதிப்புக்குள்ளான மக்கள் புனர்வாழ்வு கமிட்டியினரின் உதவியை நாடியபோது அக்கமிட்டியினரால் மேற் குறிப்பிட்ட இடங்களில் இவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இவர்கள் தாங்கள் முன்பு வசித்து வந்த தோட்டங்களில் திரும்பவும் சென்று குடியேற வழியில்லாதவர்கள். ஏனெனில் தற்போது தாங்கள் அங்கு சென்றாலும் இருக்க இடமோ, வீடோ அல்லது தொழிலோ வசதியாகக்கிடைக்காது.

ஆகவே இலங்கை அரசியலமைப்பின் 14 2 சட்டத்தில் கூறியபடி நாட்டில் ஏனைய பிரஜைகளுக்குள்ள அத்தனை உரிமைகளும் இவர்கட்கும் அளிக்கப்பட வேண்டுமென சுட்டிக் காட்டுகிறோம்.

எனவே இம்மக்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்ற எடுக்கும் அத்தனை நடவடிக்கைகளையும் நிறுத்தி தொடர்ந்து அவர்கள் அங்கேயே குடியிருந்து தொழில் செய்யும் வாய்ப்பை அளிக்க வேண்டுமென காணி அமைச்சைபணிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறோம். அத்துடன், தொழில் தருநரால் இவர்கட்கு ஏற்படும் கஷ்டங்களிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுதலை பெறதொழில் இலாகாவும் தகுந்த நடவடிக்கையெடுக்க ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

—இவ்வாறு— திரு சி வி. வேலுப்பிள்ளை தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

ரொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும் இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின் ஏகவிற்பனையாளர்கள்

துர்க்கா ஓட்டோ காட்வெயர்ஸ்

11, ஸ்ரான்லிறோட் யாழ்ப்பாணம்.

## உள்ளம் திறந்து..

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியாகிகளை அவர்களின் தியாகங்களை வெளியிட்டு பிரபல்யமானதும் தனது விற்பனையை வியாபாரத்தை கூட்டிக் கொண்டது சுதந்திரனே தவிர ஏதோ இந்தப் பத்திரிகை ஆசிரியர் அழைப்பது போல தியாகிகள் விளம்பரம் பெறவில்லை.

தியாகிக்கு விளம்பரமதேவையில்லாததொன்று நானே தியாகியாகேன்என்றுதன்னை விளம்பரப்படுத்தும் புத்தகங்கள் எழுதி ஏதோ மன அரிப்புடன் நீண்ட திட்டம்போட்டு செயலாற்றி வருபவர் யார் என்பது இலட்சிய இயக்கங்களுக்குத்தெரியும். இவ்வளவு காலமும் மதித்துவந்த பத்திரிகை ஆசிரியரை இப்படிஎழுதுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை இருந்தும் அந்த பத்திரிகை ஆசிரியரின் கடந்த காலத்தை நாம் சந்தேகிக்கின்றோம்.

ஒருசினிமாப்பத்திரிகையின் ஆசிரியர் தலைவருக்கு (அமிருக்கு) எழுதியதாய் உள்ள கடிதத்தைசுதந்திரன் பிரசுரித்துள்ளது.

எவர் எவருக்குகடிதம்எழுதுவது என்று ஒரு முறை வேண்டாமா? சுதந்திரன் வளர்ந்ததுதமிழரசுக்கட்சியால்பின்பு கூட்டணியால்ஏதோ அதன் ஆசிரியர் நினைப்பது போல் அதற்கென்று ஒரு கூட்டமும் இல்லை அதன் ஆசிரியருக்கு ரசிகர்களும் இல்லை.

இப்படிக்கு
துரபரன்
கொழும்பு

## பாட்டாளிகளின் எழுச்சி.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் மூன்று தடவைகள் என்னைச் சிறையிலே அடைத்தவர் 76ம் ஆண்டு ''ட்ரயல் அட்-பார்'' நீதிமன்றத்திலே பயங்கரமான குற்றச்சாட்டில் நான் நிறுத்தப்பட்டேன். அதற்காக அவருடைய அரசியல் உரிமையைப் பறிக்கின்ற அநாகரிகச் செயலுக்கு நாம் ஒருபொழுதும் ஆதரவாய் இருக்கமாட்டோம் என்று நாடாளுமன்றத்திலே தெட்டத் தெளிவாய்ச் சொன்னேம்.

இந்த நாட்டில் ஜனநாயகம் பெயரளவிலாவது இருக்கின்றதென்று சொன்னால் பலகட்சிகள் இயங்கும் உரிமை இருப்பதனால் ஓரளவுக்காவது இருக்கிறது. அந்த உரிமையும் பறிக்கப்பட்டால் சிங்கப்பூர், தென் கொரியா போல இன்னும் எத்தனையோ நாடுகள் அமெரிக்காவின் வழிநடத்தலிலே உலக வங்கியின் கட்டளையை ஏற்று சர்வதேசநாணயக் குழுவின் கோரிக்கையை ஏற்று மக்கள் மீது அடுக்குத்துப் பழுக்களைச் சுமத்துவதும் அதைத் தட்டிக்கேட்க முடியாதிருக்கும் நிலையை இன்னும் இருப்பதற்கு இடமளிக்கமாட்டோம்.

எங்கள் நிலையை எமது மக்கள் நன்கு உணருவார்கள். நமது இளைஞர்கள் நன்கு அறிவார்கள். மீண்டும் கூறுகின்றேன். இந்த நாட்டில்மாறி மாறி வந்த ஆட்சிகளினால் அடுத்தடுத்து எங்கள் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையிலே இனி நாம் வாழ வேண்டுமானால் எம்மை நாமே ஆள வேண்டும். அதைவிட வேறு வழியில்லை. தமிழீழத்தின் இழந்த சுதந்திரத்தை மீட்டுச் சமதர்மத் தமிழீழத்தை அமைத்திடும் மக்கள் ஆணையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம். அந்த இலட்சியத்திற்காக அயராது உழைப்போம், தொடர்ந்து போராடுவோம் என்று சூளுரைத்தார்.

## ஜே.ஆர். அமிர் சந்திப்பு!

வேலை நிறுத்தத்தால் வேலை இழந்த ஊழியர்களைப்பற்றியும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இனக்கலவரநோத்தில் குடிபெயர்ந்து அரசாங்க நிலங்களில் குடியறியுள்ள மலைநாட்டுத் தமிழ் மக்களின் நிலை பற்றியும் ஜனாதிபதியை திரு. அ. அமிர்தலிங்கம்எதிர்க்கட்சி முதல்வர் அவர்களும் திருவாளர்கள் மு. சிவசிதம்பரம் அவர்களும் இரா. சம்பந்தன் அவர்களும் பேட்டி கண்டு இன்று உரையாடினர். இவ்விரு விடயங்களையும் ஒட்டி வேறு சில அமைச்சர்களையும் உள்ளடக்கிய ஒரு மாநாட்டை கூடிய விரைவில் கூட்டிமுடிவெடுப்பதாகஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

எங்களிடம் எல்லாவிதமான பலசரக்கு சாமான்கள் விற்பனைக்குண்டு
மொத்தமாகபெற்றுக் கொள்ளலாம்

திருமுருகன்

களஞ்சியம்

274 பி. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சாந்தி (யாழ்ப்பாணம்) 2-வது வாரம்
10-30, 2-30, 4-45, 7-00, 9-45,
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
THE WIL BY CONSPIRACY
(Colour) (ஆங்கிலம்)

விரைவில் எதிர்பாருங்கள்!
எஸ். பி. வீரப்பா அளிக்கும்
திசை மாறிய பறவைகள்!
(வண்ணச் சித்திரம்)

ராஜா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30 9-30
இப்பொழுது நடைபெறுகிறது!
என் எம். நம்பியார் — கே. ஆர். விஜயா,
மேஜர் சுந்தரராஜன், லதா, ஜெய்கணேஷ்,
★ மற்றும் பலர் நடித்த ★
சுப்ரபாதம்
(பக்திப் பரவசம் நிறைந்த சித்திரம்)
(ஈஸ்ட்மன் கலர்)

உதய சூரியன் வெளியீட்டகத்தால் நல்லூர் சண்முகா பதிப்பகத்தில் 28-11-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.